சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 12 (lw–20 ) | நாள் | 16.04.2025 |
| பெயர் | ராஜசேகர் | தொழில் | துப்புரவு பணியாளர் |
| தந்தை பெயர் | சண்முகம் | வயது | 34 |
| கிராமம் | கலைஞர் காலனி | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை காலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். நகராட்சியில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். இறந்து போன அஜித் என்பவரை தெரியும் அவரை சந்திரமோகனும் அவரது கூட்டாளிகளும் கொலை செய்து விட்டார்கள். முதலில் எங்கள் தெருவை சேர்ந்த கதிரவனை வெட்டிவிட்டார்கள் அது சம்பந்தமாக கொத்ததெருவை சேர்ந்த கண்ணன் ஜெயிலுக்கு போனார். அதன்பிறகு கண்ணனை கொலை செய்து விட்டார்கள். அந்த முன்விரோதம் காரணமாகத்தான் அஜித் கொலை செய்யப்பட்டார். 2024 ம் வருடம் 3ம் மாதம், 20 தேதிக்கு மறுநாள் நானும் ராஜமாணிக்கம் என்பவரும் AVC காலேஜிற்கு பின்புறமாக போய்கொண்டிருந்தோம். அப்போது மதியம் சுமார் 2, 2.30 மணியிருக்கும். அங்கு ஒரு ஆறு பேரை DSP பிடித்து வைத்திருந்தார். சந்திரமோகன், சந்திரமௌலி, சதீஷ், ஸ்ரீராம், பாலாஜி, மோகன் தாஸ் ஆகியோரை DSP விசாரித்து கொண்டிருந்தார். அப்போது அவர்கள் நான்கு அரிவாளை காட்டினார்கள். அவர்கள் என் அண்ணன் கண்ணனை கொலை செய்த முன்விரோதம் காரணமாக அஜித்தை

ராஜசேகர்

கொலை செய்ததாக சொன்னார்கள். அவர்கள் சொன்ன வாக்குமூலத்தை போலிசார் லேப்டாப்பில் டைப் அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சந்திரமோகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது இரண்டாவது சாட்சி கையெழுத்து ராஜமாணிக்கம் என்பவருடையது. சந்திரமோகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 4** ஆகும். நான்கு அரிவாள் இரண்டு வண்டியை கைப்பற்றினார்கள். பாலாஜி சந்திரமோகன் சொன்னதைத்தான் சொன்னார். என்னிடம் காட்டப்படும் பாலாஜி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது இரண்டாவது சாட்சி கையெழுத்து ராஜமாணிக்கம் என்பவருடையது. **என்னுடையை சாட்சி கையெழுத்து மட்டும் அசாஆ 5** ஆகும். சிவப்பு கலர் அப்பாச்சி மற்றும் வெள்ளை கலர் பல்சர் வண்டியையும் (அந்த வண்டிகளில் பதிவெண் இல்லை) மற்றும் நான்கு அரிவாள்களை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து ராஜமாணிக்கம் என்பவருடையது. அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ. 6** ஆகும். நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சொத்துக்கள் கைப்பற்றுதல் மகசரில் என் முன்பாக கைப்பற்றப்பட்டவை தான். அவை முறையே சிவப்பு நிற பதிவெண் இல்லாத அப்பாச்சி வண்டி **சாபொ – 5** ஆகும். வெள்ளை நிற பதிவெண் இல்லாத பல்சர் வண்டி **சாபொ – 6** ஆகும். வீச்சருவாள் ஒன்று **சாபொ – 7** மூன்று அரிவாள்கள் முறையே **சாபொ – 8, 9, 10** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சோமசேகர்

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன அஜித்குமாரை எனக்கு சிறு வயது முதல் தெரியுமா என்றால் தெரியாது. நானும் அவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள். எத்தனை வருடமாக இருவரும் ஒரே தெருவில் இருக்கிறோம் என்றால் நான் பிறந்தது முதல் அங்கு தான் இருக்கிறேன். அவரும் அங்கு தான் இருந்தார் என்றால் சரி. காயம் பட்ட சரவணனும் அதே தெருவை சேர்ந்தவர் என்றால் சரி. அவர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் போலிசார் என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் தடயபொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் ஆறு கிமீ தூரம் என்றால் சரி. அந்த இடத்தில் வீடுகள் கடைகள் உள்ளது என்றால் ஒரே ஒரு பெட்டிக்கடையும்

சேகரன்

ஒரு மாடி வீடும் உள்ளது. அவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள் என்றால் சரி. ஐந்து நிமிடத்தில் முடிந்து விட்டது என்றால் சரியல்ல. ஐந்து மணிநேரம் ஆனது. ஒவ்வொருவருக்கும் ஒரு மணிநேரம் ஆனது. எந்த நிலை போலிசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. எதிரிகள் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் கையெழுத்து போட்ட தாள்கள் அனைத்தும் லேப்டாப்பில் தட்டச்சுசெய்யப்பட்டவை என்றால் சந்திரமோகன் கொடுத்த வாக்குமூலம் பாலாஜி கொடுத்த வாக்குமூலம் லேப்டாப்பில் தட்டச்சு செய்யப்பட்டது. பொருட்களை கைப்பற்றியதற்காக எழுதிய பேப்பர் கையால் எழுதப்பட்டது. லேப்டாப்பில் தட்டச்சு செய்தது எந்த நிலை போலிசார் என்று தெரியாது என்றால் சரி. நீதிமன்றத்தில் உள்ள நான்கு அரிவாள்களும் பயன்படுத்தப்படாத புத்தம் புதிய அரிவாள்கள் என்றால் சாக்கில் வைத்து கட்டி வண்டியில் இருந்தது. அதை கைப்பற்றினார்கள். சாக்கையும் கைப்பற்றினார்கள் என்றால் சாக்கை அவிழத்து போட்டுவிட்டார்கள். நான் அந்த இடத்திற்கு போகவில்லை என்றாலும் எதிரி சந்திமோகன் பாலாஜி அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சந்திரமோகனும் பாலாஜியும் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக கொலை செய்ததாக அவர்கள் வாக்குமூலம் கொடுத்ததாக போலிசார் சொல்லிக்கொடுத்து இட்டுக்கட்டி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக கொலை செய்ததாக சொல்வது ஆட்சேபணைக்குரியது என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்து என் தெருக்கார் என்பதால் திட்டமிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

16/4/25

மாவட்ட நீதிபதி